ஹர:

குறைவயவிநாயகர் துணை.

# திரிபு[...]ந்தகர் ஸ்தோத்திரமாலை.

இஃது

விச்ரூா வித்வான்

தாமோதர முதலியாரால்

இயற்றப்பட்டு

---

பொன்னேரி

முனிசாமி முதலியாராலும்

வீராசாமி நாயகராலும்,

முன்பதிப்பித்திருந்த பதிப்பை இப்போது

ஸ்ரீ முருகேசமுதலியாருடைய

முயற்சியால்

சென்னை கிலாட்ஸ்டன் அச்சுக்[...]

பதிப்பிக்கப்பட்டது.

1863 சோபகிருது௵ ஆனி[...]

ஹர:

ஸ்ரீ

உ

குணாலயவிநாயகர் துணை.

# திருவொற்றியூர்

# திரிபுரசுந்தரிஸ்தோத்ரமாலை.

## காப்பு

நேரிசைவெண்பா.

சாத்திரவேதாகமஞ்சாரொற்றிவடிவாம்பிகைமேல்
தோத்திரப்பாமாலையன்பாய்ச்சொல்லவருள்-நேத்ரப்
பணாலயவிநாயகக்கோ பன்னிருமாலேத்துங்
குணாலயவிநாயகநங்கோ.

சித்சுகாதீதம்.

ஸ்ரீமன்மஹாமண்டலேஸ்வரவிலாஸமாத்தேஜ்விக்நேசவநக
சீதளச்சந்த்ரதவளாங்கஹேரம்பத்ரிபுண்டரவிசாலபால
மாமள்மதாசலகராதல கஜாநந மகோதரசுகோதயச்சிந்
மயாலயகுணாலயவிநாயக மநோரத வரோதயசுபுத்ரவிமலி
நாமன்கணாலநங்கக்கடவுளாகவெங்காலனையுதைத்தகாலன்
கண்ணிற்பிறந்தழற்கண்ணனெக்கண்ணுங் கலந்தவனிடங்கலந்தாய்
தேமன்மஹாமேருமாடமண்டபமேடைசேரொற்றியூருற்றுவாழ்
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர்சித்சுகாதீதவடிவே (1)

தவளகஜநீலக்கலாபமாயூரசுந்தரமேஷவாஹநமஹா
ஷண்முகஷடாதரஷடாக்ஷரதுவாதசச்சலஜாக்ஷநளிநதேஹ
பவளநிறவங்கமெய்ஞ்ஞாநப்ப்ரசங்கபாநோதயவிலாஸதேஜ
பன்னிருபுயாசலகராதலபயோததிப்பங்கஜத்துங்கபாத

குழையணிமாபாலசுப்ரமண்யப்ரபலகுமரகுருமூர்த்தியுண்ட
குங்குமபடீரகும்பஸ்தநாலங்காரகோமளவிநோதவல்லி
திவ்யொளிவிளங்குமணிமகரதோரணமதிற்சேரொற்றியூருற்றுவாழ்
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர்சித்சுகாதீதவடிவே (2)

163997

மந்தரதராநந்தகோவிந்தவைகுந்தமாதவமுகுந்தவேத
மந்த்ரார்த்தக்ஷீரசாகரமத்யமார்த்தாண்டமண்டலபுஜங்கசயந
அந்தரங்கத்வகர்த்தவ்யகைவல்ய வாரோஹணத்துவஜவநுமகே
தநகருடவாஹநாரூடமேகஸ்யாமளாங்கவகளங்கசங்க
தந்த்ரமணிமந்த்ரவாமநமச்சகூர்மாவ தாரசீதாசமேத
சண்டப்ரசண்டகோதண்டராமஸ்வாமிசக்ரமுரஹரிசோதரி
சிந்துரக்கரிபரித்தேரோடுவீதிபுடைசேரொற்றியூருற்றுவாழ்
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர் சித்சுகாதீதவடிவே (3)

தந்தையெனவந்தவொருதக்கன்யாகத்திற் சமஸ்ததேவர்கணடுங்கத்[ச்
தருக்கொடுமகத்தொழில்செருக்கறவருக்கனுஞ் சவியொளிமழுங்கிவிலக
சந்த்ரனுடதே கலைவாணிமுன்மூக்கறத் தன்றலைதெறிக்கவெள்ளைச்
சம்புமூத்தபிள்ளையோடபின்றம்பியுந் தானோடவாணனோட
வந்தமர்புரிந்தங்குகின்றவர்முறிந்தோடவாய்ந்தஜெயவீரபுத்ர
மைந்தனைப்பெற்றசிவசுந்தரிபராசக்தி வச்ரமாங்கல்யசூத்ரி
செந்தமிழ்ப்புலவர்முதலந்தரப்புலவர்புடைசேரொற்றியூருற்றுவாழ்
சித்ரவடிவே நாகரத்நவடிவேத்யாகர் சித்சுகாதீதவடிவே. (4)

அண்டபகிரண்டமூதண்டவேதண்டமண்டலசராசரமனைத்து
மாக்கவுமளிக்கவுமழிக்கவுந்திறலுடைய வண்ணறன்கண்கண்மூடிப்
பண்டிருந்தனவெலாங்கண்டறிந்திடவொணாப் பாயிருட்படலமெங்கும்
பற்றிப்படர்ந்திடச்சித்தன்றுசெய்வித்தபான்மையென்கொல்புகலுவாய்
தண்டங்கமண்டலங்கொண்டபிரமன்றலைதறித்தங்கையேந்துமம்மே
தட்டாதநாற்பத்துமுக்கோணவட்டந் தனிற்குடியிருந்தபிடியே [ழ்
தெண்டிரைக்கடல்போன்முழங்குபலவாத்தியஞ்சேரொற்றியூருற்றுவா
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர் சித்சுகாதீதவடிவே. (5)

அரியசுரிமுகமுலவுபெரியவலைகடலுலக மசரசரபேதமுதலா
யண்டப்பரப்பிவைகளெட்டுண்டுபோதளவிலியாவும்படைக்கவல்ல
மறையிலோராயிரத்தெட்டுதளமுள்ளதாமரையாதநத்தின்மீதே
ண்டங்கமண்டலந்தண்டமொடுசதுர்வேதமாகாவ்யமேவுசெங்கைப்

பிரமமூர்த்திப்பிரியபெரியமருமகனெனப்பெற்றெம்மையின்றவன்கைப்
பிடிக்கிடந்தந்திங்கடிக்கடிவரச்செயும்பெருமைநின்பெருமையெளிதோ
திரளனப்பெடைகள்மடமாதர்நடைபயில்வயல்சேரொற்றியூருற்றுவாழ்
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர்சித்சுகாதீதவடிவே. (6)

சக்ரவாளச்சுவர்கடந்தப்புறத்திற்றதும்பாதமர்ந்தக்ஷீர
சாகரந்தனதுவயிருங்கோகநகமுட்டரித்தவதரித்தெழுந்த
லக்ஷுமித்திருமாதுகலைமாதுமுப்போதிலக்கணச்சரணங்களை
லலிதமொடுவருடவிஞ்சையர்மாதரிசைபாடரம்பையூர்வசிகளாடக்
கொக்கிறகணிந்தவொருநக்கனுறவாடபொற்கொலுவீற்றிருக்குமுன்றன்
கோலமெல்லாஞ்சொல்லவேலுமோமெலுமோகுறையாதுவளராதுகா
செக்கர்வான்மீனிழற்கண்டுபுட்டாவுவயல்சேரொற்றியூருற்றுவாழ் [ண்
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர்சித்சுகாதீதவடிவே (7)

சிந்தாமணிப்பெட்டகத்திலகுபொக்ஷபெஜீவகாருண்யவமுதே
திவ்யநவரசவசநமொழுகுபூங்கிள்ளையேநீதிலாநந்தவாரிச்
செந்தாமரைப்பொகுட்டன்னமேஞாநச்செழுங்கனிபழுத்ததருவே
செப்பருங்கற்பனைகடந்தபரவஸ்துவேசேணிலுயராணிமுத்தே
மந்தாகினிப்ப்ரவாகம்போலவடியார்கண்மலர்விழிகணீர்வாரவே
வந்தித்திறைஞ்சவருடந்துரக்ஷிக்கின்றமரகதகலாபமயிலே
செந்தாதுபோலவொளிருந்தாதுகுக்குபொழில்சேரொற்றியூருற்றவாழ்
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர்சித்சுகாதீதவடிவே (8)

பாலாழிமேற்பள்ளிகொண்டநெடுமால்தாசர்பாடநின்றுடவொருபால்
பங்கயக்கடவுண்முதலிந்த்ராதிதேவர்கள்பணிந்துவந்திக்கவொருபால்
மாலானபூலோகமேலானபெரியோர்கள்வாழ்த்தி நின்றேத்தவொருபால்
வாகுலவுநாகலோகத்துரகர்கிந்நரர்வணங்கியகணங்களொருபால்
சாலோகசாமீபசாரூபமுதலானசாயுச்யபதவிநான்குந்
தத்தங்கருத்துக்கிணங்கவங்கருள்செயுந்தர்ம்மவர்த்தநிதயாளி
சேலாவிவாளைகமுகம்பாளைதாவிமுகில்சேரொற்றியூருற்றுவாழ்
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர்சித்சுகாதீதவடிவே (9)

மந்தாரஹாரமகரந்தபரிமளவாசமருமலர்முடித்தகுழலி
மலர்மாதுமலர்மாது சுரர்மாதராதுதிநம்வருடச்சிவத்தகழலி
சந்த்ரோதயப்ப்ரகாசத்திலகமிலகவேதநுநுதலிலங்குவதநி
சர்வசம்ஹாரகாலத்தொன்றுமறியாதுதானுமிருந்தபதநி

அந்தாதிமத்யங்கடந்தநிஷ்களரகிதமானவாநந்தநடநி
அமலத்த்ரிலோசநிமநோன்மநிபுராதநியுநந்தரவிகாசரமணி
சிந்தார்கலிக்குநிகராவணஞ்சூழ்வீதிசேரொற்றியூருற்றுவாழ்
சித்ரவடிவேநாகரத்நவடிவேத்யாகர்சித்சுகாதீதவடிவே. (10)

முதலாவதுசித்சுகாதீதமுற்றிற்று.

# சித்சொரூபம்.

பூமேவுமதுலமெய்ஞ்ஞாநசுந்தரவல்லிபூதராசலகுமாரி
பூரணிசதாநந்திபுவநசக்ரேஸ்வரிபுஜங்கசயநன்சோதரி
கோமேவுபாலத்த்ரிசூலிசாம்பவிவிமலிகோகிலாம்ரதுபாஷணி
கோரமகிடாசூரசம்ஹாரகர்த்தவ்யகோமளியகௌரிவீரி
காமேவுமிந்த்ராதிதேவர்முதலோர்பரவுகமலதளநளிநசரணி [சமயமே
கருணைகடாக்ஷவீக்ஷண்யமென்கண்வைத்து காத்தருள்செயிது [மே
தேமேவுகொன்றைவெண்டும்பையறுகும்புனைச்செஞ்சடைத்தியாகரிட
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொரூபஞாநவடிவே. (11)

அந்தரிபரம்பரிநிரந்தரிபுரந்தரியநாதிரக்ஷகிவராகி.
அகிலாண்டகோடிபிர்ம்மாண்டநாயகியமலியத்வைதமுக்திமுதல்வி
சந்த்ரஜடாதரிஷடாக்ஷரிபராபரிதயாகரிசஹஸ்த்ரநாமி
சந்திரசூர்யாக்நித்த்ரிநெத்ரியாருதாரசாக்ஷிநிஷ்ட்டாநுபூதி
கந்திரிகரத்திவேதாந்தசிந்தாமணிகலோலாலமுண்டபோதிற்
கைப்பறக்கைப்பற்றியொப்பற்றகடவுளைக்காத்தவாறென்னையாள்வாய்
செந்துவிற்புலியாடைபூண்டுவெள்ளம்புலிச்செஞ்சடைத்தியாகரிடமே
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொருபஞாநவடிவே. (12)

கநகமயசிகரமணிமௌலிபுனையனையதுலிகாம்பிரசிம்க்ஷாஸநி
ககநசோடசகளாநிதிபூர்ணசந்த்ரொதையகௌமாரபிம்பவதநி
பநகபூஷணியநகிஸநகாதிமுநியாதிபரமேஸ்வரப்ரசந்நி
பஞ்சசாயகியம்ஸவாஹநிசதாநிதம்பரவுசெம்பத்மசரணி
கநகபீதாம்பரவிலாசநெடுமாலுட்களிக்குமற்புதசோதரி
கல்யாணியநவரதநின்னையேநம்புமென்கலியகலவருள்புரிகுவாய்

சினமகன்றினியமநமுடையமால்விடையாளர்செஞ்சடைத்த்யாகரிடமே
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொருபஞாநவடிவே. (13)

மாயாப்ப்ரலாபப்ப்ரபஞ்சகாரணிமூலமண்டலாகரகுண்டலி
மந்த்ரதந்த்ராயெந்த்ரபீஜபஞ்சாக்ஷரிமயேஸ்வரிமஹேந்த்ரஜாலி
காயாதிகல்பவஜ்ராங்கிநித்யாநந்தகாக்ஷிமெஞ்ஞாநசூக்ஷி
கரதலாமலகநிகரானப்ரத்யக்ஷகண்காக்ஷீநீலாயதாக்ஷீ
சாயாவிருக்ஷநிலைநேயாநுபூதியாய்த்தட்டாமநின்றுநோக்குந், [ய்
தவராஜரபிராமியிதுவேளையெளியேனைதயவுவைத்தினிதாட்கொள்வா
சேயாறுமுகவனைப்பெற்றவென்னம்மையேசெஞ் சடைத்த்யாகரிடமே
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொருபஞாநவடிவே. (14)

உத்தமகுணத்திபரிசுத்தபத்மநிசகலவுயிர்தொறும்பரவிநின்ற
ஓங்காரிறீங்காரியாங்காரிஸ்ரீங்காரிஓநமசிவாயதாரி
சத்திசாமுண்டிபெண்டோளியோராறங்கசாஸ்த்ரவேதாந்தாடநி
சங்கரிசிதம்பரிசவுந்தரிபரம்பரிசதாரம்யகுணவிசேஷி
புத்தமுதமொத்தமதுரக்கவளவருடந்துபுந்தியினுவர்திருந்து
பூதபவுஷியவர்த்தமாநமிம்மூன்றினும்புறளாமனின்றென்னையாள்
சித்தஜனைநெற்றிவிழியிற்கருகவைத்தவரர்செஞ்சடைத்த்யாகரிடமே
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொருபஞாநவடிவே. (15)

அந்தாதியற்றபேராநந்தவொளிவடிவேயத்வைதமோநவடிவே
ஐந்தெழுத்தாறெழுத்தெட்டெழுத்தோரெழுத்தகரவுருவானவடிவே
விந்தாதியந்தங்கடந்தவடிவேவேதவேதாந்தபோதவடிவே
வித்தைவடிவேயதிலவித்தைவடிவேவித்துவித்தாய்முளைத்தவடிவே
ஜந்தானபற்பலாகாரவடிவேஜீவசாக்ஷியாய்நின்றவடிவே
சாஸ்விதாகல்பவடிவேயற்பனென்னைநின்சரணம்புயத்தாளுவாய் (மே
செந்தாமரைக்கொழுங்கனலேந்துசெங்கையார்செஞ்சடைத் த்யாகரிட
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொருபஞாநவடிவே. (16)

ஆணாகிபெண்ணாகியலியாகியொலியாகியணுவிலணுவானவடிவே
அனலாகிபுனலாகிவளியாகிமண்ணாகியாகாசமானவடிவே
தூணாகிபதினாறுதுண்டிரண்டாகிமேற் றாலவுடலானவடிவே (வடிவே
சொல்லாகிபொருளாகியெள்ளுக்குளெண்ணெய்போற்சுயம் புவுருவான
காணாதகாக்ஷியங்கிங்கெங்குமாகியெங்கண்ணுண்மணியானவடிவே
கற்பூரதெரிசநவிலாஸவடிவேநினதுகருணைகடாக்ஷம்வைப்பாய்

சேணுடர்மண்ணுடர்பாதலத்தோர்பரவுசெஞ்சடைத்த்யாகரிடமே
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொருபஞானவடிவே. (17)

நீலவடிவெவேதநேத்ரவடிவேயன்பர்நினைவின்முடிவானவடிவே
நீதவடிவேதிரோதாயிவடிவேதத்வநிலையாகநின்றவடிவே
கோலவடிவேமூன்றுகாலவடிவேசொலெண்குணமாய்விளைந்தவடிவே
கொற்றவடிவேசர்வசித்திவடிவேபக்தி கோடாருளத்துவடிவே
தாலவடிவேயாலகாலவடிவேசகலசாக்ஷியொன்றுனைவடிவே
தத்போதகற்பந்தனைக்கண்டறிந்துண்டுதட்டாதநிஷ்ட்டைதருவாய்
சீலவடிவேவாலைபுவனைதிரிபுரைவடிவே செஞ்சடைத்த்யாகரிடமே
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்ற சித்சொருபஞானவடிவே (18)

ஒப்பிலாக்கற்பகக்காவாகியுலகெலா முணர்கனியுகுக்கும்வடிவே
உள்ளும்புறம்பினுந்தெள்ளரும்பாலுநீருறவுபோலானவடிவே
துப்பிலார்பாற்பெருந்துப்பாகிமெய்ப்பான சுப்ரதீபாத்மவடிவே
சொல்லரியஸ்ரிஷ்ட்டிதிதிசம்ஹாரத்ரோபவந்தோற்றநுக்கிரகவடிவே
தப்பிலாச்சிற்பராபரவெளிகடந்தந்தரங்கவழிகாட்டும்வடிவே
தன்மவடிவேயெனதுகன்மவினையகலவுன்றனதுபூஞ்சரணளிப்பாய்
செப்பொணுக்கற்புடையவற்புதாலயவடிவே செஞ்சடைத்த்யாகரிடமே
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொருபஞானவடிவே (19)

தவராஜயோகசிங்காரவடிவேவாசிதாரகவிநோதவடிவே
சரிதைகிரியாயோகஞானவடிவேயாதிசட்சமயவாதவடிவே
எவராலுமுணரப்படாதவடிவேதொகைக்கெல்லையில்லாதவடிவே
ஏகவடிவேமூலதேகவடிவேகருத்தெட்டப்படாதவடிவே
புவனாதிகோடியண்டாண்டங்களெங்கணும் பூர்ணமயமானவடிவே
பூதவடிவேவிந்துநாதவடிவேயென்றன் புந்திக்குள்வந்தவடிவே
சிவகாமசுந்தரவிலாஸவடிவேநதிச் செஞ்சடைத்த்யாகரிடமே
திநமிக்கமநமுற்றுதிருவொற்றிநகருற்றசித்சொருபஞானவடிவே. (20)

இரண்டாவது

சித்சொருபமுற்றிற்று.

# த்ரிபுரசுந்தரம்.

நீர்கொண்டகரியமுகிலனையபூங்குழலழகி நிலவனையநுதலினழகி
நெரியுமிருசிலையனையகரியபுருவத்தழகி நீர்வளைச்செவியினழகி (கி
கூர்கொண்டகருணைமழைபொழியுமிருவிழியழகி குமிழினெண்ணுசியழ
கொந்துலவுசெந்தாமரைக்கமலமுகவழகி குமுதவாய் தகையினழகி
வார்கொண்டமெஞ்ஞான வமுதுகுக்குங்கலசமார்பழகியருள்விசாலி
மறைமூலிதிரிசூலிபரிபாலிசிவலீலிவரைராஜனருள்சுபாலி
தேர்கொண்டமணிமயவிலாஸமண்டபமதிற்செறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர் த்ரிபுரசுந்தரவடிவமே (21)

வானுலகுபாதலமழிந்தாலுமழியாத வச்ரமாங்கல்யவழகி
வந்தவரைவாவென்றழைத்தறவணைக்கு மிருவனசமலரங்கையழகி
கானறுங்கொடியனைய வேநுடங்கிடையழகிகழல்கண்மாந்தளிரினழகி
கற்பகத்திருமேனியழகியன்பர்களிதையகமலாலயத்தினழகி
பானுசந்த்ராக்நிமுக்கண்ணழகியென்னையேபாதுகாத்தருளுதாரி
பனும்வீரிமகமாரியவுதாரிகௌமாரிபஞ்சலக்ஷணவொய்யாரி
தேனுலவுமருமலர்த்தடவாவிபூஞ்சோலை செறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர் த்ரிபுரசுந்தரவடிவமே. (22)

சந்தன கதம்பகஸ்தூரிபரிமளவழகிதவளகற்பூரவழகி
தகத்தாயரத்நமயபீதாம்பரத்தழகிதநுசுபஞ்சாஸ்த்ரவழகி
மந்தாரஹாரமகரந்தபுன்னுகவளமாலிகாபரணவழகி
மதுரநவரசலலிதவுசிதசுபகரவசனமங்களாகாரவழகி
சிந்தூரத்திலகசந்த்ரோதயவதநத்தழகிசிறியனேற்கருள்சகாயி
செகதாயிமகமாயிகனிவாயிகுணதூயிதேவியாகியத்ரோதாயி
செந்திருவிளங்குமணிமாடவீதிகளுன்குசெறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர்த்ரிபுரசுந்த்ரவடிவமே (23)

மத்தகஜமுகவாநநக்கடவுளைப்பெற்றுவயிறுகளிகூர்ந்தவழகி
மரகதமயூரவாஹநமுருகவேளைமநமகிழ்வாயளித்தவழகி
சத்தச்சிலம்பொலிபுலம்பவோரொன்பதாந்தனையரைப்பெற்றவழகி
தராதலந்தன்னிற்சராசரமனைத்தையுந்தற்காத்தளிக்குமழகி
புத்ரனென்மீதிலன்புற்றிந்தவேளை யருள்புரிகரகபாலிசூலி

பொறைஞாலிமறைவேலியிறைமேலிவளைபாலிபொருவிலாப்புண்யசாலி
சித்தினிமடந்தையதிபத்மனி நிறைந்தபுகழ்செறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர்த்ரிபுரசுந்தரவடிவமே. (24)

பன்னாகசாயிதன்னோடவதரித்துபற்பன்னகமணிந்தவழகி
பரவுமுப்பத்திரண்டறமேபுரிந்துலகில்பல்லுயிர்வளர்த்தவழகி
தென்னாடுவாழ்பாண்டிராஜன்மகளாகவேசெங்கோல்புரிந்தவழகி
செங்கழைவிலேந்தியேயங்கணுலகெங்குமேசெகன்மோஹனஞ்செயழகி
கன்னாருரிப்பர்போலெண்ணாமலிந்நேரங்கைதந்திரக்ஷீவாமி
கதிர்நேமிகரசாமிதவபூமிசிவகாமிககனலோகாபிராமி
சென்னாகமீதிலம்புன்னாகமென்னாளுஞ்செறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர்த்ரிபுரசுந்தரவடிவமே. (25)

படிமீதிலடியார்களிதையபதுமத்தழகிபதுமபாணக்கையழகி
பாராதியண்டப்பரப்பெலாமோர்விரற்பம்பரத்தாட்டுமழகி
மிடியேதுமணுகாதவனலானதவயோகவிரதராநந்தவழகி
விதியோதவறியாதசிவபோகசாரமேவிதையாய்நிறைந்தவழகி
கடியாமலடியேனையடியாமலாட்கொளுங்காலமீதருணிதானி
கனவானிலுறுமீனினவொனிலவுபோனிகருறுதற்றிகழ்பவானி
திடமானதடவாளைபுயரூவுபொழில்வாவிசெறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர்த்ரிபுரசுந்தரவடிவமே. (26)

அந்நாளிலேகம்பைபாற்றருகினோத்தருந்தவமுயன்றவழகி
ஐம்முகக்கடவுளைமொய்ம்புறத்தழுவியேயங்கண்புதைத்தவழகி
முன்னாகமேயெழிற்பொன்னாக்குழைந்திடமுலைச்சுவடளித்தவழகி
மும்மண்டலங்கண்முதலெம்மண்டலங்கள்புகழ்மும்முலைக்கன்னியழகி
சொன்னானமக்கென்னபோவென்றிராமலே துரிதமாயருளாசி
சுகவாசிவாழிபேசிவருநேசிமகராஜி துய்யஞானப்ப்ரகாசி
தென்னாரிகக்குஞ்சுரும்பினமரும்பொழிற்செறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர்த்ரிபுரசுந்தரவடிவமே. (27)

மன்னுமுப்பத்திரண்டவயவக்குறியெலாம்வழுவாதமைந்தவழகி
வடமால்வரைக்குரிசினிலைமாதவத்தின்மடமகளாகவந்தவழகி
கன்னற்செழுங்கதலியீரப்பலாமாங்கனியனையவாக்பவழகி [வழகி
கரியவஞ்ஞானவிருண்மலமாயையகலவொளிர்கதிரெனவுதித்த[விநோதி
சின்னமிலையென்னுடையசென்னியினிலுன்னடிசெலுத்தியாண்டருள்

ஜெகமாதியனுபூதிசதுர்வேதிநவநீதிதீரமெய்ஞ்ஞானவீதி
சென்னெற்செழுங்கமலவன்னத்தடங்கள் புடைசெறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர் த்ரிபுரசுந்தரவடிவமே. (28)

சங்கரி தனக்கிளையசங்கரியெனச்சொலித்தலமெலாம்புகழுமழகி
சாலோகசாமீபசாரூபசாயுச்சியசத்விஷயமுதவுமழகி
பங்கயத்தலைவிசெம்பங்கயத்தலைவியிவர்பணிவீற்றிருந்தவழகி
பராபரவரோதையநிராமயசுரூபப்பளிங்காஸநத்தினழகி
சங்கையென்சங்கையறமங்கையிங்கெய்துநற்றருணமாதரியகோரி
தவமாரிசிவபாரிசுகவாரிசுகுமாரிதாமஸமிலாதவீரி
செங்கமலமேவுசெங்கமலத்தில்வளையினஞ்செறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர் த்ரிபுரசுந்தரவடிவமே. (29)

எள்ளுக்குளெண்ணெய்போலுள்ளும்புறம்புமாயெங்குந்துலங்குமழகி
ஏரானபூவுடனாறும்மணமதுபோலியாதினுமிசைந்தவழகி
விள்ளரியபாலோடுநீராடுவதுபோல்வியாபித்திருந்தவழகி
மேலானசொல்லிற்சிறந்தபொருளாகவேவிளைவுற்றமைந்தவழகி
கள்ளனுள்ளங்கலங்காமலுள்ளபடிகருணைகூர்ந்தருள்வராகி
நயோகிமிருதியாகிசுகபோகிநிருவாகிகலைகளாய்ந்தருள்விவேகி
தெள்ளுதமிழ்வாணர்க்குவள்ளலேபுள்ளினஞ்செறியாதிபுரியன்னமே
திவ்யநடநத்யாகர்வாமபாகத்துவளர் த்ரிபுரசுந்தரவடிவமே. (30)

மூன்றுவது

த்ரிபுரசுந்தர முற்றிற்று.

---

# திவ்யகைவல்யம்.

நித்யகல்யாணிசுபவாக்யமங்களிவிமலிநிஷ்கபடநாடகிமஹா
நிராஞ்சநசுதாவல்யதேகிவித்யாரம்பநேயிஜகதாயிமாயி
தத்வகாடாந்தகாரஸ்வயபரஞ்ஜோதிசகலபுவனாடம்பரி
சாலோகசாமீபசாரூபசாயுஜ்யசதுர்பதவிதந்தமுதல்வி

பத்தினிமடந்தையரிலுத்தமிவிசித்ரமணிபங்கஜாநநிசங்கரி
பத்மமுகபத்மகரபத்மசிறபத்மபதபத்மாலயப்ப்ரசந்நி
சித்தமகிழ்வுற்றபரிசுத்தபத்மனியெளிமைதீமையையொழித்தாளுவாய்
த்ரிபுரசுந்தரவிமலநடநத்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (31)

பூரணிநிரந்தரிபுரந்தரிபரம்பரிபுராதநிதராதலமெலாம்
பூத்தலுமளித்தலுமழித்தலுமுடைத்தானபூரணாநந்தவாகி
நீரணிசடாமுடிச்சாமிசிவகாமியென்னினைவெலாங்கொண்டவாமி
நிலையானகலைகளோரறுபத்துநான்கினும்நின்றவைதீசவமுதே
நாரணிபராசக்திநளினாக்ஷனுக்கிளையநாயகியநந்தநாமி
நளினதனத்தன்சிரக்கரகமேகொண்டநளினக்கையன்னையெனையாள்
சீரணிப்பாமாலைபூமாலைசிரமாலைசெவ்வியினணிந்தமுதலே
த்ரிபுரசுந்தரவிமலநடநத்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (32)

மாடச்சிவேடச்சிவாணிச்சிசேணிச்சிவளமானவம்படச்சி
வண்டப்பறைச்சிநவகண்டமெல்லாம்பரவவந்தபாசாங்குசத்தி
சேடச்சிலம்பரவமாலையணிவேணிச்சிதிவ்யமுக்கண்ணுடைச்சி [சி
செட்டிச்சிதொட்டிச்சிகுட்டைச்சிநெட்டைச்சிசெழுமணிச்செம்படச்
ஆடரவமரிகாமர்வல்லிக்கொடிக்கரியவழகுடைச்சிற்றிடைச்சி [ய்
ஆண்டிச்சிவேண்டிச்சிலம்பொலிபதத்திணையடுத்தவெளியேற்கருளுவா
சிடமுநிவோரமரர்தேடுதற்கரிதானதீபமேயத்வைதமே
த்ரிபுரசுந்தரவிமலநடநத்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (33)

ஒன்றாகிரண்டாகிமூன்றாகிநான்காகிவோரைந்து வடிவமாகி
ஓராறுமாகியதிலோரேழுமோரெட்டுமோரொன்தோர்பத்துமாய்
நன்றாகிதீதாகிநடுவாகிகடையாகிநவிலுமொழிமுதலாகியே
நாடுமோரைப்பத்தோரக்கரப்போருளாகிநாற்சதுர்ப் புவநமாகி
அன்றுவிலைப்பள்ளியவனாகியவனளித்திட்டவைந்தலையனாகி
ஆணாகிபெண்ணாகிசேணாடருலகாகியங்கிங்குமொன்றுபொருளே
சென்றுதவன்கதிர்மதித்தேவரோதவருதெய்வமேமாசைவமே
த்ரிபுரசுந்தரவிமலநடநத்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (34)

ஆனைமுகனுக்குரியவல்லபைப்பெண்ணைவைத்தப்புறந்தப்பிலாமல் (ல்
அலையாதுகலையோதுமலர்மாதுபிரமனுறவைத்தங்கணோர்செங்கண்மா
மானனையவிழிமானைவைத்துருத்திரியோடுமருவுருத்திரனைவைத்து (த்து
மதியினிலுயர்ந்தொளிர்மஹேச்சுரன்றன்னொடுமஹேஸ்வரியிலங்கவை

மோனையெனவந்தசுழியோனையிற்றெய்விகமூர்த்தியொடு பூர்த்தியான
முக்திஞானசக்தியுற்றங்கிருக்கமேன்முன்னின்றபொன்னன்னமே
தீனரக்ஷகியெளியனேனையன்பாகவேதெரிசிக்கவந்தருள்செய்வாய்
த்ரிபுரசுந்தரவிமலநடநத்த்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (35)
[ணமே
எண்ணாரியபிறவிகளெத்தனையெடுத்தாலுமென்னெண்ணமுன்னெண்
எள்ளளவுமுள்ளபடி நின்னையல்லாதொன்றுமில்லைமேலுண்டென்பரேல்
கண்ணிழந்தவர்போலமண்ணுலகிலொருகையிற்கம்பூன்றிசம்போரிபோ
கத்தித்திரிந்தேயலைந்துழல்வரல்லாமல்காமனுக்காளாகியே [ல்
தண்ணமுதமதிபிழந்துண்ணவுமுடுக்கவுந்தன்வசமிலாதுமூவேழ்
தாழ்நரகில்சூழ்வார்களேழையேனுள்ளத்தளிர்த்தாமரைப்பொகுட்டில்
திண்ணமாய்வந்தங்கிருந்தறிவெனும்பெரியதீபமேதந்தருளுவாய்
த்ரிபுரசுந்தரவிமலநடநத்த்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (36)

மெய்யெனப்பெயர்கொண்டு பொய்யானதேகத்தைமெய்யென்று நம்பி
வீணாள்கழித்தறிவுநாணாதுகோணாதுவேடிக்கையாடித்திரிந் [யுலகில்
தையையோபையமநகையமடவார்க்கேவலாளாகிவாளாமெலிந்
தவரிச்சைவைத்தபொருளுக்குருகியிடைவிடாதங்கிங்குமெங்குமோடிக்
கையரியகாலுந் தளர்ந்துமென்மேலுங்கலங்கியுழல்கின்றவென்னைக்
கற்பூரவல்லிநின்பொற்பூருமென்மலர்க்கழறந்துவந்துகாப்பாய்
செய்யவட்கிளையவொருதையலும்பணியவருசீலமேமறைமூலமே
த்ரிபுரசுந்தரவிமலநடநத்த்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (37)

வாடாதமாலையேவளராதமதியமேமாற்றளவிலாதபொன்னே
மதியாதவமுதமேகதிர்வீசுமுத்தமேவாக்கடங்காதவஸ்தே
சூடாதரத்நமேகோடாதவுள்ளமேசூட்டரசனப்பேடையே
தொந்தமில்லாதநிர்த்தொந்தமேயந்தமேசொல்லீறிலாதபொருளே
நாடாதநாட்டமேநாடெங்கணும்பரவுநாயகவிலாஸமணியே
நவிலுமெளியேனிதையகமலாலயத்தினிதம்நணுகுமெய்ஞ்ஞானவுருவே
சேடாதிபதிமுதற்றேவாதிதேவர்புகழ்செல்வமேமலர்வில்வமே
த்ரிபுரசுந்தரவிமலநடநத்த்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (38)

அன்னையாந்தந்தைகுருதெய்வமேநீயன்றியகிலத்தில்வேறுமுண்டோ
அமுதசாகரமத்யவுதையமேநின்னொளியலாதுவேறொளியுமுண்டோ
என்னையாளென்னதெனும்பேராசைகொள்ளுவதுமிறைவிநீயலதுமுண்
டோ, எவ்வுலகநின்னருட்பேறன்றிமற்றொருவ ரிச்சையின் முடிப்ப

துண்டோ, உன்னையேயல்லாதுபின்னைமற்றொருதெய்வ முதவியது
செய்வதுண்டோ, ஒருநாளுமுடியாது கருணைகடாக்ஷியே யுளமகிழ்ந்
தெனையாட்கொள்வாய்,சென்னெல்வயல்கன்னலொடுமின்னுமணிமாடங்
கள் சேரொற்றியூருற்றுவாழ், த்ரிபுரசுந்தரவிமலநடநத்யாகேசர்திவ்ய
[கைவல்யவடிவே. (39)

செப்பரியமுப்பத்திரண்டறமியற்றியிச்செகதலத்தவதரித்த
ஜீவகோடிகளைவைத்தாண்டகர்த்தவ்யமேசிவனாரிடப்பாகமே
முப்பத்துமுக்கோடிதேவராதாரமேமூவர்க்குமுன்னெழுந்த [வே
முக்யமேயெப்பொருட்கிறைமையே பொறுமையேமுதியவாகநந்தவிளை
தப்பொன்றிலாதபரிசுத்தமாமோநமேசர்வருள்ளத்த்யாநமே
சற்றுனதருட்கிருபைவைத்தென்னையாளநற் சமயமிச்சமயமம்மே
செப்பனையமுலைமாதராடகுயில்பாடவளர்சிரொற்றியூருற்றுவாழ்
த்ரிபுரசுந்தரவிமலநடநத்யாகேசர்திவ்யகைவல்யவடிவே. (40)

நான்காவது-திவ்யகைவல்யமுற்றிற்று.

# தேஹசௌபாக்யம்.

செங்கமலபீடத்திலங்குமடவன்னமேசேவிக்கவருமுன்னமே
சித்தங்களித்திரட்சிக்கின்றசொன்னமே சிவயோகவிற்பன்னமே
அங்கமலமற்றபிரமன்சிரசுபின்னமேயாக்கினவனெவ்வன்னமே
ஆடிப்பளிங் குநிகரற்றபூங்கன்னமே யணிமகரமணிகன்னமே
சங்கையறவினைவந்தடுத்தபின் னின்னமேதயவுவைக்காதென்னமே
தாய்தந்தைகுருதெய்வநீயன்றிவேறில்லை தனையனேற்கினிதருளுவாய்
சிங்கப்ப்ரசண்டவாஹநமேறுமங்கையே திருவொற்றியூரமிர்தமே
த்யாகவைபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்யவடிவே. (41)

முத்தமிழ்ச்சாகரத்தொளிராணிமுத்தமே மோநமாம்பரிசுத்தமே
முதியோர்நினைத்திடுங்கதியாம்ப்ரசித்தமேமூவர்க்குமுதலர்த்தமே
தத்தையெப்போதுமறைசெப்பவளரத்தமேதண்மாலைமலர்மத்தமே
தனையணித்தேவுமுன்வாதாடுநிர்த்தமேசாத்வீதகுணசித்தமே

உத்தமமிகுத்தஞானோதயச்சத்தமேயோதவெளியேனித்தமே
உன்னையல்லாதுவேறன்னையுண்டோசொலாயுலகெலாம்பெற்றவுமையே
சித்திநிலையுற்றநவசித்தர்முத்தர்கண்மேவு திரிவொற்றியூரமிர்தமே
த்யாகவைபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்யவடிவே. (42)

மேருகிரியேறிவிளையாடுமயிலேவேதமேதினியிலோதுகுயிலே [லே
மேலுலகமேவுமொருமூன்றதெயிலேசெற்றமேருவிலிமோஹவொயி
சூரரொருகோடிகுலமாளவயிலேதந்துசோமவஙியானமெயிலே
சோரனெடுமாலரியவாரிதுயிலேகொண்டதூயபணிபூணுகயிலே
ஆருமெளியேனுமுனதானசெயலேயன்றியாரொருவரோதிமையிலே
யாருமிலையேழையிதுவேளை தனிலேயென்னையாளவரவேணுமுமையே
தேருமறைநாலுமுறைவாழ்மறுகுவீதிசூழ்திருவொற்றியூரமிர்தமே
த்யாகவைபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்யவடிவே. (43)

சந்ததசுகந்தமகரந்தவனமேமலர்த்தங்குகுழலாளகனமே
சத்தியிணையொத்தவிழியுற்றவனமேஞானசம்பந்தருண்டதனமே
பைந்தமிழ்ப்பின்சென்றகொண்டலனமே நிதம் பகரவறியாமௌநமே
பாராதியண்டம்படைக்குமுனமே ஜீவபக்ஷவிக்ஷண்யமநமே
சுந்தர சவுந்தரமிகுந்தவனமேயன்பர் துன்பகலவந்ததநமே [லுவாய்
சொல்லரும்பிறவித்துயர்க்கடலைவெல்லவொரு சொல்லாகிலுஞ் சொல்
சிந்துரத்திலகநுதன்மடவார்கணடநமிடு திருவொற்றியூரமிர்தமே
த்யாகவைபோகசையோகவாமப்பாக தேஹசௌபாக்யவடிவே. (44)

அக்கரவெருக்குபுனைசெக்கர்முடியேயணியுமன்னற்கிசைந்தபிடியே
அம்பவளவரைமேற்படர்ந்தபைங்கொடியே சொலாரணத்துற்றபடியே
தக்கவடியவரிடத்தக்கபொடியேதிவ்யசைதந்யமானபடியே
ஜகசாலகோரசஞ்சாரமிடியேயறத்தாணுயதிர்ந்தவிடியே
இக்குவலயத்திற்ப்ரசித்த துடியேயன்ன விடையுடைப்பசியதொடியே
இகபரசுகச்செல்வமேதந்துகாத்தெனையிரங்கிரட்சித்தாளுவாய் [மே
திக்கெண்டிசைப்புலவர்மெய்த்தொண்டுபுரிகின்ற திருவொற்றியூரமிர்த
த்யாகவைபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்யவடிவே. (45)

மூவுலகளித்தாண்டமும்மலைக்கொங்கையேமூவர்கட்கொருசங்கையே
மூவுலகளந்தநெடுமாற்கிளையதங்கையேமூவாமுதற்கங்கையே [யே
தேவர்முதலியாரையுமருட்டும்விற்செங்கை யேசிவனிடத்தோர்பங்கை
திவ்யநவரஸவசனவுசிதமடமங்கையே திரிநேத்ரமுளநங்கையே

ஆவலுடனுனைவந்தடுத்தவர்க்கங்கை யேயருள்செயுஞ் சித்தெங்கையே
யான் கண்டுசொல்லவல்லேனில்லை நின்பெருமையாவருமுரைப்பரெளி
ஜீவகாருண்யமேஜீவசஞ்சீவியேதிருவொற்றியூரமிர்தமே [தோ
த்யாகவைபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்கியவடிவே. (46)

அட்டகுலபர்வதத்தொப்பில்வடபூதரியகிலாண்டபுவனகரி
யானைமுதலீறெறும்பானஜீவாதரியாதவன்மகிழ்சோதரி
மட்டளகபாரகொந்தளவோலைமாதரிவனமானதனமீதரி
மணிமாலையளியேறுமலர்மாலையேதரிமாநஸங்கங்காதரி
கட்டழகமைந்துநாலெட்டிலக்கணவலங்காரியெளியேன்றீதரி
கமலாக்ஷிநினதுபேரருளாக்ஷியேதந்துகாப்பதுன்கடனலால்புள் [தமே
சேட்டையைவிரித்ததன்முட்டையையணைக்கும்வயல்சேரொற்றியூரமிர்
த்யாகவைபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்யவடிவே. (47)

ஆயிரத்தெட்டுதளமுள்ளவரவிந்தமேயனையமுகமணிதந்தமே
அரிவரிக்கந்தரந்தவளநிறநந்தமேயாடமைத்தோளந்தமே
தோயுமாகாயங்கடந்தவரைவிந்தமேதுணைமுலையிணைச்சந்தமே
சொல்லிமடவார்கட்குளுருகிக்கவந்தமேதுயர்வதற்கேதந்தமே
வீயுமிக்கொடியபதிபசுபாசபந்தமேவிட்டுநினதாநந்தமே
மேவிச்சுகித்தின்பவீடடைந்தழியாதுமேவுநாளெந்தநாளோ
சேயிதழ்த்தாமரைக்கட்குமுதநீலமலர்திருவோற்றியூரமிர்தமே
த்யாகவைபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்யவடிவே. (48)

உகதநவமணிமயகிரீடகீர்வாணியேயுசிதபல்லவபாணியே
உத்துங்கஞானபரிசுத்தசர்வாணியேஔசித்யகல்யாணியே
பறுவலாகமமுதற்பதினெண்புராணியேபதவிகட்கோரேணியே
பவக்கடல்கடப்பதற்கொப்பற்றதோணியேபாநோதயக்கேணியே
அநுதிநந்துதிசெயார்நாவிருப்பாணியேயாதியரவப்பூணியே [யோ
அன்னவாஹநனென்னையிந்நேரமுன்னிருகணருள்புரிந்தாட்கொள்வை
திகமணிப்புரவியோரேழுயர்வுயிர்த்துவாந்திருவொற்றியூரமிர்தமே
த்யாகவைபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்யவடிவே. (49)

பாகநவரஸமொழுகுமினியவதிம்ருதுசொல்லிபஞ்சலக்ஷணிசுமெல்லி
பைந்தருவுமோர்கொழுக்கொம்பெனப்படர்வல்லிபாரமாமேருவில்லி
ஆகமதிலோர்புறந்தேஹமாகப்புல்லியன்புற்றிருந்தவில்லி
அந்தாளமோடுபூச்செந்தாதுகுத்தல்லியந்தாமரைக்குநல்லி

மோகமறவேபோகமார்க்கந்தனைக்கெல்லிமுபலவங்கையினெல்லி [வாய்
முறைபோலெனக்குநீயறிவிக்கவேண்டுமிம் மொழிதடுத்தாட்கொள்ளு
சேகரச்சந்த்ரொதையமண்டலத்தன்னமேதிருவொற்றியூரமிர்தமே
த்யாகவைமேபோகசையோகவாமப்பாகதேஹசௌபாக்யவடிவே. (50)

ஐந்தாவது-தேஹசௌபாக்யம் முற்றிற்று.

---

# ஜீவமாணிக்கம்.

---

ஓபாதகவலைகொண்டுழல்கின்றவம்பனல்லுணர்வையறியாதவம்பன்
ஓரைம்புலக்கள்வராலென்புதேடுநா யொத்தலைந்துலவுவம்பன்
காயாபுரிக்கோட்டைமாயாதுகிலையென்றுகனவுகண்டுளறும்வம்பன்
கண்மூடியொருகணமிருந்துநித்யாநந்தகாக்ஷிகாணுதவம்பன்
தாயார்தமக்கையார்தந்தையாரென்றுளேதானதறியாதவம்பன்
தயிரியமிலாவம்பனயராமலிதுவேளைதயவுவைத்தமுதகலைகள்
தேயாதவளராதமதியமுதருந்திநான்றெரிசிக்கவாருமம்மே
திருவொற்றிநகருற்றநடாகத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (51)

வானத்தையொருநொடியில்வில்லாய் வளைப்பனெனவாய்மதம்பேசும்வ
ம்பன், மண்ணையொருகயிறாய்த்திரித்திந்தவுலகினளவைப்புகல்வனென்
னும்வம்பன், மோனத்தைநடுநிலைதியானித்தவன்போல மூச்சைப்பிடி
க்கும்வம்பன், முக்திநிலையிதென்றுசத்யமாயான் சொல்லமுதல்வனென்
றுரைசெய்வம்பன், ஞானத்தையாய்ந்தகனவான்சித்துபோலவே நாகரி
கவேடவம்பன், நானெனதிரண்டற்றநடுநிலையிருந்தசுகநாயனேனுடிய
ன்பாய்,தேனொத்தமதுரமிர்துவசனிசுந்தரவல்லிதெரிசிக்கவாருமம்மே
திருவொற்றிநகருற்றநடாகத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (52)

மானொத்தவிழியிலேபிறையொத்தநுதலிலேமதிமிக்கநொந்தவம்பன்[ன்
வளையொத்தசெவியிலேமுகையொத்தநகையிலேவாஞ்சித்திருந்த வம்ப
வானொத்தசுழலிலேகமுகொத்தமிடறிலேமயல்மெத்தவைத்தவும்பன்

மலரொத்தகையிலேசுடரொத்தமெய்யிலேவலுவைத்திழந்தவம்பன்
மீனொத்தமணியிலேமலர்மெத்தையணையிலேவீணாசைகொண்டவம்பன்
மெல்லியர்கள்பொல்லாதசல்லியக்ககனத்தில்வீணாள்கழித்தவம்பன்
சீனிச்சருக்கரைக்கினியவமுதுண்டுநான்றெரிசிக்கவாருமம்மே
திருவொற்றிநகருற்றநடனத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (53)

அன்பார்போரெள்ளளவுமில்லாதகொடுவம்பனுவலொழியாதவம்பன்
ஆரீதேசிபரதேசிசிவயோகிதவராஜரருமையறியாதவம்பன்
வண்பானமடையரோடிடைவிடாதொழுகிமிகவஞ்சமேகொண்டவம்பன்
மாறாதசஞ்சலச்சாகரத்திடைநீந்திமாளாதியங்கும்வம்பன்
ஒன்பான்றுளைப்பெற்றமண்பாண்ட நிலைநம்பியோடித்தியங்கும்வம்பன்
ஓகோவிதென்னப்ப்ரபாவமறியே னென்போலுலகிலொரு வம்பனுண்
டோ,தென்பாண்டியன்பெற்றசெல்வமேயெளியனான்றெரிசிக்கவாருமம்
மே, திருவொற்றிநகருற்றநடனத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (54)

ஆறானகொலைகளவுகட்காமமதமேறியாவேசமுற்றவம்பன்
அறிவிலாவம்பனன்னெறியிலாவம்பனுயரறிஞருறவற்றவம்பன்
தேறாதசிந்தையுந்தெளியாதநெஞ்சமிவைசேர்ந்து குடிகொண்டவம்பன்
செத்தப்பிணங்களோடொத்தப் பிணம்போற்சிமிட்புண்டுறங்குவம்பன்
வேறாயபலவிடையமாறிபித்தேறியதுவெறிகொண்டுலாவுவம்பன்
வேதாந்தசித்தாந்தசமரஸசுபாவநிலைமேவிநான்வாழ்வதென்றோ
சேணாடுகுங்குமக்கொங்கைமரகதவல்லிதெரிசிக்கவாருமம்மே
திருவொற்றிநகருற்றநடனத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (55)

என்னென்றுசொல்லுவேன்மன்னுமிரவலர்தமக்கெளிதுமுதவாத
ஏழையெனவந்தவரபாயந்தெரிந்தவரிடுக்ககற்றாதவம்பன் [வம்பன்
பன்னுமிவர்சிறியர்பெரியோரெனக்கண்டெதிர்பணிந்து பரவாதவம்பன்
பக்கியொடுமுக்திசாதனவழியடைந்தவர்பரிக்ஷையறியாதவம்பன்
அன்னமயமுதலானபஞ்சகோசங்கடந்தாய்ந்தங்குறாதவம்பன்
அத்வைதநித்தியாநந்தசைதன்யப்ரணவாகாரபீடத்திலே
தென்னவன்பெற்றபொன்னன்னமே நின்னையான்றெரிசிக்கவாருமம்மே
திருவொற்றிநகருற்றநடனத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (56)

ஐவகையிரண்டுதிங்கட்கருப்பையிலேயங்கிங்கெழுந்தவம்பன்
ஐந்துவயதாகியொருசிந்தனையிலாமலேயாடித்திரிந்தவம்பன்
மைவழியும்விழிமாதர்கைவழிமருந்தினான்மயங்கிப்ரமித்தவம்பன்

மக்கண்மனைபெண்டுதாய்தந்தையுறவாம்பெரியவாரியில்விழுந்தவம்பன்
பொய்வழியிதென்றுசத்சைவசமையாதீதபோதமணுகாதவம்பன்
பொறையிலாவம்பனொருகுறைவிலாமெய்ஞ்ஞானபோகவாழ்வெய்தியன்
பாய், தெய்வக்களுக்கரியதெய்வமேயெளியனுன் றெரிசிக்கவாருமம்
மே, திருவொற்றிநகருற்றநடனத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (57)

மநம்புத்திசித்தமாங்காரநான்காதிவழிமட்டடங்காதவம்பன்
மாயாப்ப்ரவாகத்திலேயாமலைவரான்மாச்சர்யமானவம்பன்
சினங்கொண்டகாமாதியாறுபேராற்றினிற்சிரமுழுகியாழ்ந்தவம்பன்
செப்புமோரொன்ப தோட்டைக்குடிலைநம்பி யுட்செம்புபோல்வெம்பு
வம்பன. தனஞ்சுற்றமில்லம்புறப்பற்றைவெல்லவொருசக்தியுமிலாதவம்
பன், சஞ்சாரகோரபீகரவாரபாரராக்ஷஸமாயைநீங்கிநின்னைத்
தினங்கண்களிக்கவொளிர்கர்ப்பூரவல்லிநான்றெரிசிக்கவாருமம்மே
திருவொற்றிநகருற்றநடனத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (58)

ஊருகாசுமுதவாதமுழுலோபர்தமதாவலுற்றுமதிகெட்டவம்பன்
ஒன்றுனவஸ்துவொன்றுண்டென்று மதியாமனுளறிக்கலங்கும்வம்பன்
பெருகாது குறையாது திரிகாலநிறைவானபேறுகாணாதவம்பன்
பேச்சற்றிருந்தபேராச்சாயவெளிநடம்பேணிநோக்காதவம்பன்
உருகாதகன்னெஞ்சவஞ்சரோடெஞ்சாமலுறவதுபுரிந்தவம்பன்
ஓகரியநினதுபாதாரவிந்தங்களையுவந்தனுதிநந்துதித்துத்
திருகாதஞானநிஷ்டானுபவநிலையினன்றெரிசிக்கவாருமம்மே
திருவொற்றிநகருற்றநடனத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (5

தன்னுயிர்பிழைக்கும்பொருட்டுமன்னுயிர்வாதைசலியா தியற்றும்வ
ன், தனதுநோய்போலமற்றொருவர்நோயென்றுளந்தன்னி லெண்ண
வம்பன், கன்னமிடுவார்தமக்கன்னமிட்டுளவோடுகளவுகற்பிக்கும்வம்ப
ன், கையறுப்புண்டதென்றலுஞ்சுணும்பிடாக்கடியமனதுடையவம்பன்
பொன்னென்றபோதெலாமென்ன தென்றுள்ளுளேபூரித்தழுங்குவம்ப
ன், பொய்யுருதிரண்டவுருமெய்யாகவந்தவெனை புந்திக்குளிந்தவேளை
சென்னிமலையாகாரபீடத்தினின்பதந்தெரிசிக்கவாருமம்மே
திருவொற்றிநகருற்றநடனத்தியாகேசர்ஜீவமாணிக்கவடிவே. (60)

ஆறாவது-ஜீவமாணிக்கம் முற்றிற்று.

# த்யாகேசரிருகண்மணி.

பஞ்சாய் நரைக்குமளகத்தைமஞ்சென்று வீண்டக்ஷ்மது கொண்டபாவி
பல்லென்புகண்டுமலர்முல்லைமுகையாமெனப்பார்த்துப்ப்ரமித்தபாவி
நஞ்சாணவெண்பீளையொழுகுமிருவடுவிழியைநளின மென்றேத்துபாவி
நாறுமொரு தோல்வாயைநாரண்முக்கனியென்றுநாடித்தவித்தபாவி
சஞ்சாரமாகசிறுநீருதிரவாசலைத்தலமென்றிறைஞ்சுபாவி
சற்பாத்ரமறியாதபாவியெப்போதுனதுதாணிழற்பெறுவதம்மே
செஞ்சாமரச்சொரூபவஞ்சியேயன்பருட்டிகழ்ஜீவசஞ்சிவியே
சித்ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணியே(61)

உள்ளன்பொளெள்ளளவுமின்றிநயவார்த்தையாயுபசரிக்கின்றபாவி
ஒப்புவமையில்லாதபாவியாபதத்தனிலுதவாதகொடியபாவி
கள்ளக்கருத்தேயலாமலெப்போதுளங்கரையாதபெரியபாவி [ன்றபாவி
...ண்டொன்றுசொல்லியொருவர்க்கொருவர்போர் செயக்காட்டிவைக்கி
...ளப்படாதகுற்றங்களெத்தனையோதரஞ்செய்திருந்தபாவி
...றேனுநின்கடைக்கண்பார்வைவைத்தெனைத்தாங்கடிமைகொள்ளுமம்
...ள்ளமுதவாரிப்ப்ரவாகமேயன்பருட்டிகழ்ஜீவசஞ்சிவியே [மே
...ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணியே(62)

...பிரண்டெட்டுசாண்தன்னிலொருசாணுக்குநாளும்வருந்துபாவி
...ரந்தனத்துவழிமலசலம்புழுகொழுகுநடையனைக்கேங்குபாவி
...பிரண்டதனிலிருகாலோடுலாவுமொருகட்டைக்கிரங்குபாவி
...மப்பெருக்கொருங்காகப்பொதிந்ததோர்கடநம்பிவெம்புபாவி
காலந்தகன்கரும்பகடேர்ந்தெதிர்ந்துவருகாலமெனசெய்வனந்தோ
கருணைகடாக்ஷவீக்ஷண்யப்ரம்ஹானந்தகாக்ஷிதந்தாளுமம்மே
சேலுண்டகேதனன்புத்ரியேயன்பருட்டிகழ்ஜீவசஞ்சிவியே
சித்ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணியே(63)

அழல்கண்டமெழுகுபோலுருகாதபடுபாவியன்பொன்றிலாதபாவி
ஆதிதாய்தந்தைகுருதெய்வமேநிலைமையாயதுசரிக்காதபாவி
சுழல்கின்றகாற்றிற்கறங்குபோன்மாயையிற்சொக்கித்துவண்டபாவி
தொற்சமையமறியாதுபற்சமையவழியிலேசோம்பித்தளர்ந்தபாவி
விழல்கண்டுமுத்துலைபிறைத்தொன்றுமின்றியேவீண்போதொழித்த

பாவி, மெய்யானநின்செஞ்சரண்டேனருந்திநாமேவுநாளுரைசெயம்மே
செழுகண்டையொத்தசேற்கண்ணியே யன்பருட் டிகழ்ஜீவசஞ்சீவியே
சிதரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணியே(64)

தன்னுட்பெரும் பொருளிருப்பதறியாது பொன்றனையடுத்தெய்த்தபாவி
தவபோகமடையாமலவபோகவாழ்வதேசதமென்றுவந்தபாவி
பன்னரியமெய்ஞ்ஞானவீட்டைப்பெறாதுமலபாண்டவீடுற்றபாவி
பாசபந்தப்புழுச்சேற்றிலாழ்ந்தள்வற்றபாதகஞ்செய்தபாவி
என்னகுறைசெய்ததோவறிகிலேன்முன்னாளிலெழுதியபடிக்குற்றதோ
இனியேனு மெளியேற்கிரங்கியாண்டருளுநாளெந்நாளுரைசெயம்மே
சென்னிமணிமுடிகொண்டவன்னமேயன்பருட்டிகழ்ஜீவசஞ்சீவியே
சித்ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணியே(65)

பாருலகில்நின்பெருமையறியவேசெந்தமிழ்ப்படிக்கவறியாதபாவி
பக்தியொடுநின்பூசைசெய்துவருவோர்தமைப்பணியாதகொடியபாவி
நீரணிகடுக்கையஞ்சடிலமுநிவோரெனநினைந்துநோக்காதபாவி
நெறியிலாப்பாவிவீரன்முறையிலாப்பாவிமநுநீதிதேராதபாவி
யாருலகிலிப்படிக்கென்போலுமொருபாவியாருமிலைநீயறிகுவாய்
யாரூபலாவண்யத்ரிபுரசுந்தரிகௌரியடியேனையாளுமம்மே
தேரிரவிமதிவந்நிநேத்ரியேயன்பருட்டிகழ்ஜீவசஞ்சீவியே
சித்ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணியே(66)

நல்லுடலநெடுநாளிருக்குமெனநமனுக்குநாளைக்கழித்தபாவி
நல்லோர்கள்பொல்லோர்களெல்லோருமொன்றென்றுநடுநிலையிலாதபாவி
தொல்லைபலகொண்டளவுசொல்லவொண்ணாதவெந் துயரத்தழுந்துபா [வி
சுத்தமதசுத்தமெனநித்தியமநித்யமெனசூக்ஷிகாணாதபாவி
சல்லியச்சங்கடஞ்சாங்கடமெனத்தேர்ந்துசரநிலையுறாதபாவி
சைதந்யசொரூபநிலைநின்றுன்னையன்போடுதரிசிப்பனோசொலம்மே
தில்லைத்தலத்திலுறுசிவகாமியன்பருட்டிகழ்ஜீவசஞ்சீவியே
சித்ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணியே(67)

கல்லாதமடமையானட்டமரமதுபோற்கதிப்புடனுதித்தபாவி
கற்றபெரியோர்பெருஞ்சங்கத்திலேகிதன்காதுங்கொடாதபாவி
அல்லாதகாரியமதானகாரியமென்றறிந்தாடவாதபாவி [வி
அச்சமொடுநன்னடையொழுக்கமின் சொற்பெருமையருணனிட்டாந்தபா
கொல்லாதவிரதமேநல்லதென்றறியாதுகொல்லத்துணிந்தபாவி

கொடுபாவிபடுபாவியினிகடைத்தேறநின்குமுதவாய்மலருமம்மே
செல்லார்ந்தசில்லோதிவல்லியேயன்பருட்டிகழ்ஜீவசஞ்சீவியே
சித்ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணியே(68)

நஞ்சனையவஞ்சருறவோடுள்ளமெஞ்சாதுநஞ்சித்தளர்ந்தபாவி
நாடோறுமெளியரைத்தாறுமாறென்றுளநடுங்கவேவைதபாவி
கிஞ்சித்தெனுங்கருணையில்லாவெறும்பாவிகிளர்முறையிலாதபாவி
கெர்வித்தடங்காப்ப்ரவாகமதமேறிதலைகீழாய்நடந்தபாவி
வஞ்சநெஞ்சத்தோடுகொஞ்சுமடவார்தங்கள்வாஞ்சைக்கிசைந்தபாவி
வறுமைநோய்கொண்டுலகில்பெருமையேயடையாதுவாடிக்கசிந்தபாவி
செஞ்சொன்மொழியஞ்சமேநின்செயலலாதொன்றுசேருமேவாராது
காண், சித்ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்.(69)

அகிலபுவனங்களிற்சகலவுயிர்தங்களிலறக்கொடியநெடியபாவி
ஆசைப்பெருங்கேணிமூழ்கிநிலைகாணுமலங்கூசலாடுபாவி
நிகிலநிஷ்களரகிதமானமுநிவோர்கடமைநிந்தித்துநொந்தபாவி
நிறையறிகிலாப்பாவிபொறையறிகிலாப்பாவிநிலைமையறியாதபாவி
புகலறியஞானமஞ்ஞானமீதேதெனப்புந்திதெளியாதபாவி
பூவுலகில்வந்துநானுன்றனையடுத்ததாற்போதவெனையாதரித்தே
சிகரகுண்டலிவிமலிநிகரிலாநின்பாதசேவைதந்தாட்கொள்ளுவாய்
சித்ரூபவஸ்துதிருவொற்றிநகருற்றுவளர்த்யாகேசரிருகண்மணி. (70)

ஏழாவது-த்யாகேசரிருகண்மணி முற்றிற்று.

## வாமபாகம்.

அறியாதசிறியனுனொருகாலையறியாமலாழ்ந்துநொந்தேயழுவனே
அப்புப்பெனும்பெரியநுட்பத்தைநோக்காமலகிலவாஞ்சையிலழுவனே
குறிபேதுமுணராதநெறிவாய்மையேகொண்டகோபாத்மமாயழுவனே
கூகூவெனக்குளறிஓகோவெனத்தளறிகொள்ளைகொண்டேயழுவனே
வெறியானமற்கடம்போலேயுழன்றுபைசாசவேஷத்தழுவனே
வேதாந்தசித்தாந்தசமரஸசுபாவநிலைமேன்மையறியாதழுவனே

வறியாளனுனதுபூந்திருவாய்மலர்ந்தோன்றுமகிழ்வாகவுரைசெயம்மே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (71)

ஆறுதலமேலானவீடகந்தோன்றாமலனியாயமாயழுவனோ
அங்கிங்கெனத்தளர்ந்தேமங்கியழுவனோவாதாரமற்றழுவனோ
சிறுகரணாகிவிஷயத்தினாலழுவனோதெளியாமலேயழுவனோ
செம்புபோல்வெம்மையம்புலன்களாலழுவனோசிற்சக்தியாலழுவனோ
தேறுநெறியறியாதுவீணாள்கழித்துப்போய்த்தேகநொந்தேயழுவனோ
சித்தர்நிலைமுக்தர்நிலைபக்திநிலையுக்தியாய்த்தேராமலேயழுவனோ
மாறுசெய்யாமலுன்பேறுபெறவேயன்புவைத்தின்புபுரியுமம்மே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (72)

இனியாதமநதினாலொழியாமலழுவனோவிச்சைமூன்றாலழுவனோ
ஏகாந்தமாய்நின்றபோகாந்தசாகரத்தேறாமலேயழுவனோ
சனியானகனவான்மயங்கியேயழுவனோதந்தைதாயென்றழுவனோ
தம்பியண்ணன்பிள்ளைநம்பியேயழுவனோதனதுமனைவிக்கழுவனோ
கனிவானவூணொடுறங்குதற்கழுவனோகைக்காசுகட்கழுவனோ
கல்லா? புல்லருறவுக்கிசைந்தழுவனோகண்டகாட்சிக்கழுவனோ
வனசாம்புயச்செல்விநின்பாதமேபோற்றவரமெனக்கருளுமம்மே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (73)

ஈயாதலோபியென்போர்க்குமுன்பழுவனோவீந்துபின்னின்றழுவனோ
இல்லையென்போர்க்குவெணபற்றிறந்தழுவனோவேதிலார்கட்கழுவனோ
மாயாப்ப்ரபஞ்சவாழ்வுக்குநொந்தழுவனோவாஞ்சைவாரியிலழுவனோ
மநம்புத்திசித்தமாங்காரகோரங்களான்மாழ்குசிந்தைக்கழுவனோ
தாயானநீயன்றிவேறில்லையாகையாற்சமயமிச்சமயமோர்ந்தே
சத்தானமுக்திநிலைபெற்றேகளித்துநான்சந்ததமும்வந்திக்கவே [மே
வாயாரவோருமொழி புகன்றுகாத்தருளுவாய் வர்ம்மமேன் தர்ம்மமம்
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (74)

உல்லாஸமடமாதர்சல்லாபவைபோகவுறவுக்குழன்றழுவனோ
உமிநீர்கசிந்தொழுகுமதரவாஞ்சைக்கிச்சையொழியாமலேயழுவனோ
கல்லானமலைபோன்முலைக்குருகியழுவனோகைக்காந்தளுக்கழுவனோ
கலைக்குந்தலைக்குமலைக்கும்வலைக்கட்கலைக்குவந்தேயழுவனோ
பொல்லாதகொடுவரவல்குலுக்கழுவனோபோகவிஷயத்தழுவனோ
பொய்யிலாமெய்யுடையதையலேவையகம்போற்றவந்தேயுதித்த

வல்லாளியெல்லாந்தெரிந்தகநவீரியேவந்துகாத்தருள்செயம்மே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (75)

ஊக்கமதுகைவிடேலென்றவ்வையார் சொன்னவுண்மையுணரா தழுவ
ஒழியாதபசுபாசபந்தத்தழுந்தியேயோயாமலேயழுவனே [னே
காக்கைபோற்சுற்றங்கடழுவியேயழுவனேகல்லாதமுறையழுவனே
கைப்பனேபொய்ப்பனேசொர்ப்பநம்போலுற்றகாக்ஷக்கிருந்தழுவனே
ஏக்கமேகுடிகொண்டபாக்கியத்தழுவனேவில்லாமை கண்டழுவனே
எளியனென்றழுவனேவிளியனென்றழுவனேவேதேதுகொண்டழுவ
வாக்குமநமெட்டாதபூரணாநந்தமேவரமெனக்கருள்செயம்மே [னே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (76)

எஞ்சாதபஞ்சமாப்பாதகத்தழுவனேவெளியவறுமைக்கழுவனே
ஏராளதாராளதயவிலாதழுவனேவேசனுற்றேயழுவனே
நஞ்சானகஞ்சாமதுப்பாநமுண்டுளேநாணித்திரிந்தழுவனே
நாமென்றுநீயென்றுவேறுபாடானமொழிநாடித்தளர்ந்தழுவனே
கெஞ்சாமலேயிருந்தஞ்சாறுவழிகொண்டுகெர்வித்திருந்தழுவனே
கெடுவனேபடுவனேவிடுவனேமடையக்கிலேசமுற்றேயழுவனே
மஞ்சார்ந்தகுழலிநின்செஞ்சேவடிப்போற்றவரமகிழ்ந்தருளுமம்மே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (77)

ஏதுகாரியமுள்ளதென்றுநானழுவனேவேதிலேனென்றழுவனே
இறகிலாப்பக்ஷிபோற்றுறையிலாக்கப்பல்போலேங்கித்தவித்தழுவனே
காதலாலலைவாய்த்துரும்புபோலழுவனே கைத்தலையில்வைத்தழுவனே
கண்ணிலான்கைக்கோலிலாதுபோலழுவனேகண்கநீர்கொண்டழுவனே
பாதகத்தொழில்கொண்டவேதையாலழுவனேபாபியென்றேயழுவனே
பகைரைந்துஜெந்துபோலுணவு கொண்டழுவனேபக்குவமிலாதழுவனே
மாதவத்தோர்பரவுப்ரணவதாரகமுண்டுமருவநின்க்ருபைசெயம்மே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (78)

ஐயையொவென்சொல்லுகேனிந்த வனியாய மனியாயமென்றழுவனே
யாரைநானம்புவேன் வேறில்லை யென்கொடுமை யறிவரென்றேயழுவ
னே, பொய்யுடையமெய்யைமெய்யென்றுநிச்சயமாய்ப்புழுங்கிநொந்தே
யழுவனே, பூரகக்கும்பகமிரேசகந்தோன்றாதுபொய்வழியிலேயழுவனே
கையிலொருநெல்லியங்கனிபோலிருக்கின்றகாக்ஷிகாணாதழுவனே
தலையிரண்டொன்றாகநின்றநிலையேகண்டுகருதாமலேயழுவனே

ணைவயகந்துதிசெய்யுமெய்யானதெய்வமேவந்துவந்தருள்செயம்மே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (79)

ஒருமொழியிருந்தநிலையறியாமலழுவனோவோமாமகன்றழுவனோ
ஓங்காரறீங்காரஸ்ரீங்காரபீஜமென்றன்னுமலையழுவனோ
குருமொழிமறந்துபலமொழிகளிலிருந்துநான் கூசாமலேயழுவனோ
குற்றமிதுநன்கீதெனத்தேர்ச்சிகொள்ளாது கூகூவென்றேயழுவனோ
கருமவினையால்வந்தசஞ்சாரவாரிதிகடக்காமலேயழுவனோ
கழிவனோவிழுவனோதொழுவனோவழியாது காற்கொண்டிருந்தழுவனோ
வருமொழிக்கெதிர் மொழியுரைக்காமலேநினது வநஸவடிதாரும்மே
வளமுற்றதிருவொற்றிநகருற்றத்யாகேசர்வாமபாகத்துவடிவே. (80)

எட்டாவது-வாமபாகம் முற்றிற்று.

## மௌநவடிவம்.

பூதபவுஷியவர்த்தமானமிஃதிஃதெனப்புந்தியினிலோர்ந்துமறியேன்
போந்தவிடயத்தைக்கடந்தபெரியோரெனப்போற்றிப்பணிந்துமறியேன்
சாதுசத்சங்கத்திருந்தவர்திருத்தொண்டுசற்றும்புரிந்துமறியேன்
தாமஸரஜோமயந்தானிராமயமானசாத்வீகஞானமறியேன்
காதகக்கொலைகளவுகட்காமவெம்மையிற்கட்டுண்டுமட்டுண்டமற்
கடம்போலுழன்றுளம்வருந்துமெளியேனைநின் கருணைகூர்ந்தருள்புரிகு
வாய்ச், சிதளச்சந்த்ரவதநாங்கிமதுகரவயற்சேரொற்றியூரம்ஸமே
சிற்சபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌநவடிவே. (81)

ஆசானபாசாடவிப்பெருங்காடிதென்றறிஞரான்றோர்ந்துமறியேன்
ஐம்புலக்கள்வர்கட்கோர்மரப்பொந்திதென்றறிவினாலாய்ந்துமறியேன்
நீசானமும்மலக்கிருமிப்புழுத்தொழுகுகெடியபையென்றுமறியேன்
நீளமோரெட்டுசாணதிலொன்பதுத்துளைநெருங்கிய துருத்தியறியேன்
ஏசானசடமிதைத்திடமென்றுநம்பிநானேமாந்திருக்கநாளை
எமனார்போமெனத்தள்ளிகொடுபோம்பொழுதிலென்செய்கேனின்
செயலலால், தேஜோமயாநந்தவாரியேவீரியேசிருற்றபோரம்ஸமே
சிற்சபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌநவடிவே. (82)

ஆகமபுராணகலையானமறு நீதிமுதலாகியவையோதியறியேன் [யேன்
ஐந்தெழுத்தாறெழுத்தெட்டெழுத்தோரெழுத்தத்யாய நஞ்செய்துமறி
சாகரதடாகமதிலேகித்ரிகாலஜபதபமநுஷ்ட்டாநமறியேன்
தர்ம்மார்த்தகாமமோக்ஷாநந்தவழியிற்றடா துநிலைநின்றுமறியேன்
தோகையர்கண்மோகவநுராகத்திலேமாஞ்சொக்கிப்ப்ரமித்துவாடுஞ்
சுதனென்னையிதுததியில்வந்துரக்ஷித்துமேற்சுகபோகவாழ்வுதருவாய்ச்
சேகரச்செந்திருவிளங்குபூங்கந்நியேசிருற்றபேரம்ஸமே
சிற்சபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌநவடிவே. (83

பாருலகமுழுதொருகுடைக்குளரசாக்ஷிபுரிபார்வேந்தருறவுமறியேன்
பஞ்சலக்கணவிலக்கியமுழுதுணர்ந்தசத்பாவலர்கணேசமறியேன்
நாரியர்மயற்கவலையற்றபெரியோர்க்குரியநன்னெறிநடந்துமறியேன்
நல்லோர்கள்பொல்லோர்கள்வல்லோர்களில்லோர்கணடையறிந்தொழு
கியறியேன், காரியாகாரியமிதென்றுதன்னுள்ளுளேகண்டஃதியற்றவறி
யேன், கதிர்மதியிலாவிருட்படலமனையேனைநின்கழறந்துவந்துகாப்பா
ய்த், தேருமறையோருமதிலாருந்திருக்கோயில்சிருற்றபேரம்ஸமே
சிற்சபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌநவடிவே (84)

இல்லாமைசொல்லிவந்தெதிர்நின்றிரப்போர்க்கியன்றமட்டுதவியறியேன்
என்னிடத்திலையமற்றவரிடத்தெய்திநுவிசையுமென்றுரைசெய்தறியே
கல்லாமைகற்றபுன்கபவரோடுறவாய்க்கலந்தொருநலத்தையறியேன் [ன்
கற்றுணாந்தெள்ளளவுமுள்ளபடிநிலையிலாக்கட்டுரையினென்றுமறியேன்
கொல்லாமைகொல்லுங்கொலைக்கருங்கண்ணினர்கொடுமையையொழிப்
பதென்றோ, கோதகலநினைவந்தடுத்ததாலன்னையென்கோரிக்கையீடே
ற்றுவாய்ச், செல்லாமைசெல்லுட்குலாவு பூந்தோகையேசிரூற்றபேரம்
ஸமே,சிற்சபையினிர்த்தமிடு கர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌ. (85)

செப்புதற்கொப்பிலாவறுபத்துநாற்கலைகள்தேர்ந்தபெரியோரையறியேன்
திகழ்நான்குவேதத்திலுற்றகார்யங்களைச்சிந்தித்துணர்ந்துமறியேன்
தப்பிலாமுநிராஜர்தங்களருமைப்பெருமைசார்ந்தங்குவந்துமறியேன்
தவராஜர்கவிராஜர்புவிராஜர்மஹராஜர்சார்புற்றிருந்துமறியேன்
ஒப்பிலாவன்னையேநின்னையேநம்பினேனுனதுபூந்தாளருளுவாய்
உலகெலாம்பெற்றருட்கருணைகடாக்ஷியேவுனையன்றிவேறுமுளதோ
செப்பனையகொங்கையேமங்கையேநங்கையேசிருற்றபேரம்ஸமே
சிற்சபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌநவடிவே. (86)

163997.

நன்கீதுதீதீதுநாடீதுகாடீதுநகரமீதென்றுமறியேன்
ஈடுவீதுமுதலீதுகடையீதெனக்கருதிநானுணர்ந்தொன்றுமறியேன்
பொன்காதல்மண்காதல்பெண்காதலிம்மூன்று பொருளெனத் தேர்ந்து
மறியேன், புண்ணியங்கண்ணியந்தன்னியமெனச்சொலும் புகலினியமா
ர்க்கமறியேன், வன்காதகக்கொடிய ரென்போலுமடைய ருடைய விதிமு
றைக்கிரமமறியேன், வாடாதுநாடோறுமிதேறவே நினதுவன்கருணை
வைத்தாளுவாய்த், தென்காவலன்பெற்ற சிவியேமுனிவியே சிருற்றபேரம்
ஸமே, சிற்சபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌனவடி (87)

ஆராகிலும்பெரியராகினுலவர்தமையடுத்துபசரித்துமறியேன்
அங்கிங்குமெங்கெங்குமுள்ளதேதெய்வமென்றன்புகூர்ந் தோதவறியே
பாராளவேகருதிநேராகநின்றுளேபண்புவைத்தெய்தவறியேன் [ன்
பக்குவாபக்குவமதீதென்றுநீதம்பரிந்துகண்ணுற்றுமறியேன்
காரானகூந்தலார்மானனெஞ்சங்கடிந்தபேரென்றுமறியேன்
கைபினிற்பொய்யிலா நெல்லியங்கனிபோல கண்டநின்கருணைபுரிவாய்த்
தேராதசிர்தையேனின்புத்ரனல்லையோசிருற்றபேரம்ஸமே
சிற்சபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌனவடிவே. (83)

வங்குசிங்கென்றமொழி தங்குமிடமீதென்றுமாவாக்கினுலுமறியேன்
வாலாயமானவிருகாலானமேலைவழிமன்னிக்கலந்துமறியேன்
அங்கிங்குபொங்குமோங்காரரீங்காரமாயாய்மைத்தெளிந்துமறியேன்
ஆஃதறியனொஃதறியனிஃதறியனெஃதறியனுநந்தபூர்த்தியறியேன்
செங்கமலபீடத்தமைந்தபூங்கந்நியேஜெகமெலாம்விர்ப்பந்நியே
சிவராஜயோகியேதவராஜயோகியேசெப்பருப்விவேகியனையே
திங்களணிவதநியேயெங்கள்குலதெய்வமேசிருற்றபேரம்ஸமே
சிற்சபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌனவடிவே. (89)

கேளாதகேள்வியாநின்னதென்றறிகிலேன்கேட்டபெரியோரையறியேன்
கிட்டாதநிஷ்டாநுபவநிலைமையீதெனக்கிட்டிநிஷ்டித்துமறியேன்
வாளாவிருந்துநான்வீணாள்கழித்தேமயங்கியேதொன்றுமறியேன்
மனையாளைநினையாளைவினையாளைமுனையாளைவாஞ்சித்தியங்கியறியேன்
தோளானதோழரைத் தொழுதுமறியேனிந்ததொல்வினைக்கருமமறியே
ன், தொகையுமறியேனல்லவகையுமறியேனென்னசொல்லுகேனெனையா
ளுவாய்த்,தேளானவல்வினைக்காளாவதோசொலாய்ச்சிருற்றபேரம்ஸமே
சிறசபையினிர்த்தமிடுகர்த்தவ்யமேத்யாகர்சித்ரூபமௌனவடிவே, (90)

ஒன்பதாவது-மௌனவடிவம் முற்றிற்று.

# முக்திவடிவம்.

சீரிலகுமருமலர்த்திவ்யபூஞ்சரண்வாழிசெறிகணைக்கால்கள்வாழி
திகழுமூரந்தமுழந்தாள்வாழியங்கதலிசெப்பருந்தொடைகள்வாழி
தாரிலகுபொற்காஞ்சியல்குற்றடம்வாழிசாற்றருமருங்குல்வாழி
தநவரைக்கும்பத்தநங்கண்மார்பணிவாழிதண்பணைத்தோள்கள்வாழி
வாரிலகுசெங்காந்தளங்கைத்தலம்வாழிமாங்கல்யசூத்ரம்வாழி
வாசதளநளிநவிழிமருவுமுகமதிவாழி வாழ்த்துமெளியேற்கருள்செய்
வாய்த், தேரிலகுதிருவொற்றிநடநத்தியாகேசர்சிந்தைக்கிசைந்தமயிலே
சித்பராநந்தபரிசுத்தமேயன்பருட்சித்தமேமுக்திவடிவே. (91)

அணிமருவுமணிமயகிரீட குண்டலமிலகு மரியசில்லோதிவாழி
அர்க்கச்சிமண்டலநிகர்த்தபொற்பணிவாழியமலபொற்சுட்டிவாழி
கணிமருவுநீரோற்பலம்புனையுமிருசெவிக் கடையிலிருகொப்பும்வாழி
கம்மல்சம்புன்முதற்பொம்மலணிநகைவாழிகண்டமாபரணம்வாழி
மணிமருவு நவரத்நகஜித மாங்கல்யமுடிவண்களந்தன்னில்வாழி
மாற்பிற்சரப்பளிபதக்கம்வையிரப்பொடிமதாணித்துலங்கவாழி
திணிமருவுதிருவொற்றி நடநத்தியாகேசர்சிந்தைக்கிசைந்தமயிலே
சித்பராநந்தபரிசுத்தமேயன்பருட்சித்தமேமுக்திவடிவே. (92)

நீறணிசதாநந்திநிர்மலாகரிவாழிநித்தியாநந்திவாழி
நிற்குணி நிரம்பரிநிராகாரி நிர்விஷயநிர்த்வந்த நிமலிவாழி
ஆறணிசடாக்ஷரிபராபரிபுராதநியநந்தநவவாமிவாழி
அகிலாண்டகோடிப்ரம்மாண்டநாயகிவாழி யத்வைதமௌநிவாழி
ஆறணிருத்ராக்ஷமாலிகாபரணிமூலாதாரியநகிவாழி
அஞ்ஞாநவிருளொழியமெஞ்ஞாநவொளிதந்தவாபத்சகாயிவாழி
தேறணித்திருவொற்றிநடநத்தியாகேசர்சிந்தைக்கிசைந்தமயிலே
சித்பராநந்தபரிசுத்தமேயன்பருட்சித்தமேமுக்திவடிவே. (93)

கல்லாலினீழற்கதித்தமுநிவரர்நால்வர்கமலபூந்தாள்கள்வாழி
கவுணியர்குலத்தவதரித்தசம்பந்தரிருகஞ்சச்சரண்கள்வாழி
செல்லாதபரவைவாயிற்றூதுசெலவரன்சேர்வித்தகடவுள்வாழி
சிதம்பரக்கோவையருளிச்செய்தமாணிக்கதேவாதிதேவன்வாழி
எல்லாந்தெரிந்தவென்னப்பனப்பர்க்குரியவெழிலிருந்தாள்கள்வாழி

எந்தையாமறுபத்துமூவர்முதலோர்பெரியரிணையடிக்கமலம்வாழி
செல்லார்ந்ததிருவொற்றிநடநத்தியாகேசர் சிந்தைக்கிசைந்தமயிலே
சித்பராநந்தபரிசுத்தமேயன்பருட்சித்தமேமுக்திவடிவே. (94).

நந்திமுதலெம்பிரான்வைரவடுகக்கடவுளுதனிருதாள்கள்வாழி
நளிநக்குழந்தையைப்பெற்றநாராயணனுகரிசபாதம்வாழி
கந்தரக்கயிலைவளரும்புனிதசிவபூதகணநாதரடிகள்வாழி
கர்மேந்த்ரியங்களொடுஞானேந்த்ரியங்களைக்கண்டித்தமுனிவர்வாழி
சந்திரன்கிந்நரர்விஞ்சைவித்யாதரர்சங்கீதசாரம்வாழி
சாரணர்வாரணர்காரணர்பூரணர்சத்பதவிநான்கும்வாழி
சிந்துரத்திருவொற்றிநடநத்தியாகேசர்சிந்தைக்கிசைந்தமயிலே
சித்பராநந்தபரிசுத்தமேயன்பருட்சித்தமேமுக்திவடிவே. (95)

நவசித்ரமுப்பத்துமுக்கோடிதேவரிருநளிநச்சரண்கள்வாழி
நாற்பத்தெண்ணாயிரத்திருடிதிருவடிகளாம்நளிநகமலங்கள்வாழி
பவமதையொழித்திட்டபஞ்சகங்கிகள்வாழிபகர்சப்தவன்னிவாழி
பைந்தருத்தேவரிந்திரன்வாழியவர்தமைப்பணியுமுநிவோர்கள்வாழி
தவமிகுந்தேதேவதாசிலூர்வசிரம்பைசார்திலோத்தமைகள்வாழி
தக்கவயிராணியொருபக்கமின்புறவாழிசார்வதாகாலம்வாழி
சிவயெனுந்திருவொற்றிநடநத்தியாகேசர்சிந்தைக்கிசைந்தமயிலே
சித்பராநந்தபரிசுத்தமேயன்பருட்சித்தமேமுக்திவடிவே. (96)

ஆளியெண்டோளிமாகாளிபூந்தாள்வாழியணிமஹாருத்ரிவாழி
யாகிநிசாகிநிடாகிநிமோகிநியமரர்சூர்மகளிர்வாழி
கோளிலாவாராகிவல்லிசுந்தரிவாழிருணகோமளாங்கிவாழி
கொற்றநவநயுவையைநித்யமங்களிவாழிகோதிலாவசனிவாழி
சாளிநன்றுலகினிற்றூவாதமாவாழிசகலபூவையர்கள்வாழி
சந்த்ரசூரியர்வாழியந்தரத்தோர்வாழிசப்தமேகங்கள்வாழி
தேளிவர்த்திருவொற்றிநடநத்தியாகேசர்சிந்தைக்கிசைந்தமயிலே
சித்பராநந்தபரிசுத்தமேயன்பருட்சித்தமேமுக்திவடிவே. (97)

சல்லாதபுல்லோர்கணல்லோர்களெல்லோருங்காக்ஷிக்குவந்துவாழி
கடையோர்கண்மடையோர்கண் மூடையோர்கண்தடையிலாக்கற்புக்கி
சைந்துவாழி, பொல்லாதஜீவமுதலெல்லோரும் வாழிவண்பொன்வெள்
ளிமுதலும்வாழி, போகாந்தசாகரவிலாசமுநிவோர்வாழி போதத்தநிந்
தோர்வாழி, தொல்லாடவற்குரிய வெல்லோருபெல்லவே சேர்ந்தமு

பொருக்கம்வாழி, தொலைவாழிகிலைவாழிகலைவாழிமலைவாழி சொல்லரிய
பொருளும்வாழி, செல்லாதசெல்லுறைத்திருவொற்றிநடாநத்தியாகேச
ரூரியமயிலே, சித்பராநந்தபரிசுத்தமேயன்பருட்சித்தமேமுக்திவ. (93)

ஆறெழுத்தைந்தெழுத்தாமூன்றெழுத்து முதல்யாவையும்வாழிவாழி
அறவாழி துறவுமுதலாகியபராபரத்தண்ணலின்புற்றவாழி
தேறுதொண்ணூற்றாறுதத்துவமெலாஞ்செல்லதேகமின்புற்றவாழி
தெருள்வாழியருள்வாழியருளுதயத்திலகுசின்மயாநந்தம்வாழி
கூறுமாறுதாரநிலைபறிந்தேநின்ற கோமானிலங்கவாழி
குறிவாழிநெறிவாழிமுறைவாழி யாநந்தகோஷ்டத் துறைந்தோர்வாழி
சேறிலாவயல்வாய்ந்த திருவொற்றிநடநத்தியாகேச ரூரியமயிலே
சித்பராநந்தபரிசுத்தபேயன் பருட்சித்தமேமுக்திவடிவே. (99)

பூவாழிபொறைவாழிபுகலுமுதலோர்வாழி புலனைந்தும்வாழிவாழி
பொன்வாழியோரைந்துகங்கைகயினருள்வாழிபுசிதமுனிசாமிவாழி
மாவாழிவீராசுவாமிபூபதியாழிமருவறிவுவாழிவாழி
வாக்காதிநோக்கமுதலானகோசரம்வாழிமச்சமாவாழிவாழி
தேவாழிதேவர்முதலோர்வாழிமேலானசெல்வமேவாழிவாழி
செப்புதற் கொப்பிலாத்தாமோதரன்வாழி செந்தமிழ்க்கல்விவாழி
தேவானதிருவொற்றிநடநத்யாகேசர்சிந்ை தக்கிசைந்தமயிலே
சித்பராநந்தபரிசுத்தபேயன்பருட்சித்தபேமுக்திவடிவே. (100)

பத்தாவது-முக்திவடிவம் முற்றிற்று.

## பிழை திருத்தல்.

| பா | வரி | பிழை | திருத்தல் |
|---|---|---|---|
| 4 | 5 | வீரபுத்ர | வீரபத்ர |
| 12 | 5 | கர்திரி | கந்தரி |
| 13 | 1 | சிம்கூஹாஸகி | சிம்ஹாஸனி |
| 16 | 4 | யதில | யகில |
| 21 | 4 | தகையினழகி | நகையிநழகி |
| 36 | 6 | ருழ்வார்கள் | வீழ்வார்கள் |
| 56 | 4 | பக்கியொடு | பக்தியொடு |
| 73 | 6 | கல்லா? | கல்லாத |

163997

9B / 2.115